18.11.2022

O.S No. 210/2017

**P.W.2 சத்ய பிரகாஷ்**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் பாரத மிகு மின் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் . 05.11.2008 ல் பணியில் சேர்ந்தேன் . பணியில் சேரும்போது பயிற்சி இன்ஜினியராக சேர்ந்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான்தான் எனது வழக்கறிஞருக்கு சொன்னேன் . 2009 ம் ஆண்டு பொறியாளராகவும் , 2011 முதல் முதுநிலை பொறியாளராகவும் பணிபுரிந்து வருகிறேன் . எனக்கு தமிழில் எழுதப்படிக்கத் தெரியும். எனக்கு அந்த சமயத்தில் விலை ஒப்பந்தத்தில் (Rate Contract) கையெழுத்து போட அதிகாரம் இல்லை . நான் வாதி நிறுவனத்திற்காக சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல . தனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார் . பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ளபடி பிரதிவாதிக்கு பொருட்கள் அனுப்பப்பட்டதாக கூறப்படும் காலகட்டத்தில் நான் சம்மந்தப்பட்ட துறையில் பொறுப்பாளராக இருந்தீர்களா என்ற கேள்விக்கு அந்த துறையில் தலைமை பொறுப்பாளராக இல்லை . ஆனால் அந்த துறையில் ஒருவராக இருந்ததாக சாட்சி கூறுகிறார் . மேலும் அந்த துறையில் கையெழுத்து போடும் அதிகாரம் மட்டும் தனக்கு இல்லை என்றும் , மற்றபடி அந்த துறையில் ஒரு பொறுப்பாளராக இருந்ததாக சாட்சி கூறுகிறார் . அந்த சமயத்தில் 350 முதல் 400 Sub Contract விடப்பட்டிருந்தது. சுமார் மேற்படி நபர்களுக்கு ஒரு லட்சம் முதல் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் டன் வரையான பொருட்கள் ஒரு வருடத்திற்கு Supply செய்துள்ளோம். வாதியின் நிறுவனம் ஒரு Sub Contractor இடமிருந்து மற்றொரு Sub Contractor க்கு சாமான்களை Supply செய்வது கிடையாது . ஆனால் Sub Contractor கேட்டுக்கொள்ளும்பட்சத்தில் பொருட்களை மற்றொரு Sub Contractor க்கு கொடுப்பது வழக்கம். Sub Contractor ஒருவருக்கு பொருட்களை கொடுக்கும்போது மற்றொரு Sub Contractor தங்களுக்கு பொருட்கள் வேண்டுமென்று கோரினால் அதை எங்கள் நிறுவனம் Supply செய்யாது. அவ்வாறு பொருட்களை வாங்கிக்கொண்ட Sub Contractor வேண்டுகோள் இல்லாமல் மற்றொரு Sub Contractor க்கு மாற்ற நிறுவனத்திற்கு அதிகாரம் இல்லை . குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்கப்பட்ட வேலையை சம்மந்தப்பட்ட Sub Contractor முடிக்கவில்லை என்றால் அவரிடம் கொடுக்கப்பட்ட மூலப்பொருட்களை வேறு ஒருவருக்கு கொடுக்க நிறுவனத்திற்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் சம்மந்தப்பட்ட Sub Contractor வேண்டுகோள் கொடுக்கும் பட்சத்தில் மற்றொரு நபருக்கு மாற்றிக்கொடுக்கும் அதிகாரம் உள்ளது . பிரதிவாதியைப் பொருத்து சேதாரத்தின் சதவீதம் எவ்வளவு நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது

என்றால் 0.5 சதவீதம் per week அதிகபட்சமாக 15 சதவீதம் ஒரு வாரத்திற்கு சேதாரம் கணக்கிடப்படும். Purchase Order இருந்து மூன்று மாதத்திற்குள் பிரதிவாதி அவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை முடிக்கவேண்டும். எந்த தேதியில் கொள்முதல் உத்தரவு கொடுத்தோம் என்பது எனக்கு தெரியாது என்ற சாட்சி ஞாபகமில்லை என்று தற்போது கூறுகிறார். அவ்வாறு மூன்று மாத காலத்திற்குள் வேலையை முடிக்காவிட்டால் கொள்முதல் உத்தரவை வேறு நபர்களுக்கு மாற்றிக்கொடுக்கப்படும் என்று பிரதிவாதியிடம் சொன்னோம். அவ்வாறு கொள்முதல் உத்தரவு வேறு நபர்களுக்கு மாற்றிக்கொடுக்கும்போது ஏற்கனவே கொள்முதல் உத்தரவு வழங்கப்பட்ட Sub Contractor இடமிருந்து மூலப் பொருட்களை எங்கிருந்து பெறப்பட்டதோ அங்கு கொடுக்கச் சொல்வோம். அவ்வாறு மூலப் பொருட்களை கொடுக்காதபட்சத்தில் அதற்குண்டான தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுப்போம். Sub Contractor உரிய காலத்திற்குள் வேலையை முடிக்காதபட்சத்தில் அவரிடமிருந்து வேறு நபர்களுக்கு கொள்முதல் உத்தரவு வழங்கும்பட்சத்தில் அவ்வாறு உரிய காலத்திற்குள் வேலையை முடிக்காத Sub Contractor க்கு புதிதாக நிறுவனத்திலிருந்து எந்த கொள்முதல் உத்தரவும் கொடுக்கப்படமாட்டாது என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd./- K. Babu, 18.11.2022,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.